# இரண்டாம் பருவ பொது தொகுத்தறித் தேர்வு - 2024

## ஏழாம் வகுப்பு

பதிவு எண் :

*

## தமிழ்

நேரம் : 2.00 மணி

மதிப்பெண்கள் : 60

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:-

அ) சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக: 4 x 1 = 4

1. தூண் என்னும் பொருள் தரும் சொல் ________?

அ) நெகிழி ஆ) சென்னி இ) ஏணி ஈ) மதலை

2. பெண்களுக்கு நிகராகப் பாரதிதாசன் கூறுவது ________.

அ) மயில் ஆ) குயில் இ) கிளி ஈ) அன்னம்

3. "செப்பேடு" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) செப்பு + ஈடு ஆ) செப்பு + ஒடு இ) செப்பு + ஏடு ஈ) செப்பு + யேடு

4. பலபொருள் தரும் ஒரு சொல் என்பது ________.

அ) இயற்சொல் ஆ) திரிசொல் இ) வடசொல் ஈ) திசைச்சொல்

ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக. 2 x 1 = 2

5. கல்வியில்லாத நாடு ________ வீடு.

6. காலத்தைக் காட்டும் பகுபத உறுப்பு ________.

இ) பொருத்துக :- 4 x 1 = 4

7. கழனி - கதிரவன்

8. நிகர் - மேகம்

9. பரிதி - சமம்

10. முகில் - வயல்

II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. 5 x 2 = 10

11. மரக்கலங்களைத் துறைமுகம் நோக்கி அழைப்பது எது?

12. கப்பலின் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக?

13. பாரதிதாசனின் மனத்தைக் கவர முயன்ற இயற்கை பொருள்கள் யாவை?

14. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?

15. தாய்மையின் ஓவியத்தில் நிறைந்திருக்க வேண்டியவை யாவை?

16. ஓவியங்களின் வகைகள் யாவை?

17. மண், பொன் என்பன எவ்வகைச் சொற்கள்?

III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3 x 4 = 12

18. கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது?

19. கல்விச் செல்வம் குறித்து நாலடியார் கூறும் கருத்துக்களை தொகுத்து எழுதுக?

20. கல்வியே அழியாத செல்வம் என்பதை விளக்குக?

21. கேலிச்சித்திரம் என்றால் என்ன ?

22. பெயர்ப் பகுபதம் எத்தனை வகைப்படும்?

IV. பின்வரும் மனப்பாடப் பகுதியை அடிமாறாமல் எழுதுக. 4 + 2 = 6

23. வானம் ஊன்றிய - எனும் கலங்கரை விளக்கம் பாடலை எழுதுக.

24. "இழுக்கு" என முடியும் திருக்குறளை எழுதுக.

V. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 10 x 1 = 10

25. *பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக.*

கண்மணி நாளை பாடம் படித்தாள்.

26. *குறிப்பு கொண்டு "மா" என்னும் எழுத்தில் தொடங்கும் சொல்லைக் கண்டறிந்து கட்டங்களை நிரப்புக:*

அளவில் பெரிய நகரம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

27. *ஓர் எழுத்துச் சொல்லால் நிரப்புக :*

_______ மணம் வீசும்.

28. *பின்வரும் சொல்லை இருபொருள் தருமாறு தொடரில் அமைத்து எழுதுக:*

மாலை

29. *இடைச்சொல் "ஐ" சேர்த்துத் தொடரை மீண்டும் எழுதுக.*

பாடல் பாடினான்.

30. *கலைச்சொல் எழுதுக.*

HARBOUR

31. *பொருள் எழுதுக*

பூரிப்பு

32. *பிரித்தெழுதுக*

எழுத்தென்ப.

33. *தமிழ் எண் கொண்டு எழுதுக.*

உயிர் எழுத்துக்கள் _______ உம், மெய்யெழுத்துக்கள் _______ உம், சேர்த்து முதலெழுத்துகள் _______ ஆகும்.

34. *பொருந்தாத சொல்லை எடுத்து எழுதுக.*

ஈ, பூ, கை, கண்.

VI. ஏதேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளிக்க. 1 x 6 = 6

35. "ஆழ்கடலின் அடியில்" கதையைச் சுருக்கி எழுதுக.

36. மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.

VII. ஒரு பக்க அளவில் விரிவாக எழுதுக. 1 x 6 = 6

37. அ) உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்து தர வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

*(அல்லது)*

ஆ) கீழ்காணும் குறிப்புகளைக் கொண்டு "எங்கள் ஊர்" தலைப்பில் கட்டுரை எழுதுக.

முன்னுரை - அமைவிடம் - பெயர்க்காரணம் - சிறப்பு இடங்கள் - திருவிழாக்கள் - முடிவுரை.

******

www.Padasalai.Net